

வேளச்சேரி மேற்குப் பகுதி, தரமணி தந்தை பெரியார் நகரில் குடிநீர் மற்றும் கழிவுநீர் நீர் அகற்று வாரியத்தின் சார்பில் குடியிருப்பு பகுதியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு மேற்கொண்டார். இதில் 13 வது மண்டலக் குழுத் தலைவர் இரா.துரைராஜ், டி.ஜி.வினய், சிவ கிருஷ்ணமூர்த்தி, அஃதாப் ரசூல், பகுதிக் கழகப் பொறுப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி, 178 வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ்.பாஸ்கரன், அன்பு, பிரேமா, பொ.த.மதிவாணன், த.பார்த்திபன், கே.என்.தாமோதரன், தே.கோபி, ஜி.பி.எஸ்.பாலசதீஸ், எஸ்.முருகவேல், க.பாரதிதாசன், வி.சக்திவேல் ஆகியோர் உடன் உள்ளனர்.

## கோட்டூர்புரம் – 170வது வார்டில்
# ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!
### அமைச்சர் மா.சுப்பிரமணியன் – இரா.துரைராஜ் பங்கேற்பு!

சென்னை, செப். 11-

பெருநகர சென்னை மாநகராட்சி 170வது வார்டு, கோட்டூர்புரம் ரயில் நிலையம் அருகில் உள்ள விளையாட்டுத் திடலில் இன்று (11.9.2025) வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3.00 மணி வரை ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம் நடைபெறுகிறது.

அரசின் 13 துறைகளின் மூலம் 46 சேவைகள் குறை தீர்க்கும் திட்ட முகாமில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு துவக்கி வைக்கிறார்.

இதில் சைதை கிழக்கு பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் கலந்து கொள்கிறார்.

இவ்வாறு 170 வது வட்ட கழகச் செயலாளர் கோட்டூரபுரம் க.மணி, 170 அ வட்டக் கழச் செயலாளர் கோட்டூர் கோ. சண்முகம் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

## நேபாள தலைநகர் காத்மாண்டுவில்
# பன்னாட்டு தொழிற்சங்க கூட்டமைப்பு மாநாடு!
### தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநிலத்தலைவர் அமிர்தகுமார் பங்கேற்பு!

காத்மாண்டு, செப். 11–

உலகளாவிய தொழிற்சங்கமான பன்னாட்டு தொழிற்சங்க கூட்டமைப்பின் தெற்காசிய மாநாடு நேபாளத்தின் தலைநகர் காத்மாண்டுவில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநிலத்தலைவர் த.அமிர்தகுமார் கலந்து கொண்டு பேசினார்.

இம்மாநாட்டில் ஜப்பானில் பணிபுரியும் பொதுப்பணியாளர்கள் அனைவருக்கும் தொழிலாளருக்கான அடிப்படை உரிமை வழங்க வேண்டி தீர்மானத்தை முன்மொழிந்து பேசினார்.

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநிலத்தலைவர் த. அமிர்தகுமார் முன்மொழிந்த இத்தீர்மானத்தை அனைவரும் வழிமொழிந்ததால் இத்தீர்மானம் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

இம்மாநாட்டில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், வங்காள தேசம், நேபாளம், மலேசியா, சிங்கப்பூர், மியான்மர், தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற பல்வேறு நாடுகளிலிருந்தும் தொழிற்சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இம்மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நேபாளத்தில் தற்போது கலவரங்கள் கட்டுக்கடங்காமல் உள்ள நிலமையையும் பரிசீலித்த இம்மாநாடு இது தொடர்பாகவும் சிறப்பு தீர்மானம் முன்மொழிந்து அத்தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.



மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, 145வது வார்டில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு பொது மக்களின் பல்வேறு கோரிக்கைகளுக்கு தீர்வு காணும் வகையில் நடவடிக்கை மேற்கொண்டார். இந்நிகழ்வில் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், பகுதி கழக நிர்வாகிகள் R.கர்ணல், தீ.பாலாஜி, வட்ட கழக செயலாளர் ப.ஆலன் மற்றும் கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள், பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



தாம்பரம் மாநகரம் செம்பாக்கம் தெற்கு பகுதி 44வது வட்ட திமுக சார்பில் முதல்வர் பிறந்த நாள் விழா, பொதுக்கூட்டம் தாம்பரம் மாநகர தொண்டர் அணி துணை அமைப்பாளார் எ.வி.சுரேஷ் ஏற்பாட்டில் எ. மனோகரன், மு.பாரதிதாசன், சு.சிவராஜ் ஆகியோர் முன்னிலையில் 7.9.2025 அன்று நடைபெற்றது. இதில் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பயனாளிகளுக்கு தையல் இயந்திரம், சலவை பெட்டி உள்ளிட்ட நல உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினர். இதில் பகுதிச் கழக செயலளார் டி.காமராஜ் எம்.சி., இரா. விஜயக்குமார், டி.பூங்கோதை, சி.பரிமளா, சி.சுரேஷ் எம்.சி., சி.ஜெகன் எம்.சி., என்.சீனிவாசன், எம்.ஆர். ராமச்சந்திரன், பா. பிரதாப், சி.புஷ்பராஜ், ஆ.வீரப்பண், மு.ஜெயந்தி, பரி அழகுசுந்தரம், ஆர்.செல்வம். ஆர்.மோகன், ரிஸ்வானா, க.கணபதி, கஅபி, த.தமிழ், மோ.நவீன், ச.விக்கி, ஆ.மணி, சு.சிவராமன், சு. சாய்கொளசின், சு.மொளீஸ்வரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தந்தை பெரியாரும்-தமிழ்நாடு முதலமைச்சரும்!

ஒவ்வொரு ஆண்டும் தந்தை பெரியாரின் கொள்கைகளின் தேவை சமூகத்தில் அதிகரித்துக் கொண்டேதான் இருக்கிறது.

அத்தகைய வலிமையான கொள்கை வாரிசாக திராவிட மாடல் நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் இருக்கிறார்.

தந்தை பெரியார் இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற சிந்தனையாளர். மக்களில் சரி பாதியாக உள்ள பெண்கள் விடுதலைக்காக, 1928 முதல் பேசியவர். பெண்களைப் பற்றித் தந்தை பெரியார் சிந்தித்த அளவுக்கு உலகத்தில் வேறு எந்த ஒரு சிந்தனையாளரும் சிந்திக்கவில்லை. பெண் விடுதலை பெற வேண்டுமானால் “ஆண்மை” அழிய வேண்டும் என்றார். பெண்கள் விடுதலை குறித்துப் பேசுவதும், எழுதுவதும் இன்று எளிது. ஆனால் 7080 ஆண்டுகளுக்கு முன்பு இப்படிச் சிந்தித்து அதற்குச் செயல்வடிவமும் கொடுத்து வெற்றியும் பெற்றார்.

ஒரு ஆண் படித்தால், அவன் மட்டுமே படிக்கின்றான்; ஒரு பெண் படித்தால் அந்தக் குடும்பமே படிக்கின்றது. பெண்கள் தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொள்ளக்கூடிய அளவுக்கு ஊதியம் தேட ஆரம்பித்து விட்டாலே, ஆண்களுக்கு அடிமையாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறியவர் பெரியார்.

பெரியார் கூறுகிறார் : வாழ்க்கையில் இன்ப, துன்பங்கள் போக, போக்கியங்களில் இருவரும் சமஉரிமையுடன் வாழுங்கள். கணவன் மனைவி இருவரும் தாங்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ வேண்டும். வரவுக்கேற்ற செலவு செய்ய வேண்டும். சிறிதாவது வருமானத்தில் மிச்சப்படுத்த வேண்டும்.

“மூடநம்பிக்கைகளை ஒழித்துப் பகுத்தறிவுக் கேற்ற முறையில் நடக்க வேண்டும். கோயில் திருவிழாக்களுக்குச் செல்லக்கூடாது. எங்காவது போக வேண்டுமானால், அறிவை விசாலமாக்கும் பொருட் காட்சிச் சாலை, இயந்திரத் தொழிற்சாலை போன்றவற்றிற்குச் சென்று பார்க்க வேண்டும். அதிகமான குழந்தைகளைப் பெற்றுக் கொண்டு பகவான் (கடவுள்) கொடுத்தார் என்று சொல்லக் கூடாது. ஒன்று, இரண்டு குழந்தைகள் பெற்று மகிழ்ச்சியுடன் வாழுங்கள். ஆண்கள், பெண்களுக்கு சம உரிமையும், சம பங்கும் கொடுங்கள். உங்கள் மனைவியை நினைத்துக் கொண்டே யோசிக்காதீர்கள். உங்களுடைய செல்லப் பெண் குழந்தைகளையும், உங்கள் தாய், சகோதரிகளையும் மனதில் வைத்து யோசியுங்கள். நம் நாட்டுப் பெண்கள், மேல்நாட்டு பெண்களைவிடச் சிறந்த அறிவு, ஆற்றல், வன்மை, ஊக்கம் உடையவர்கள், பெண்களை வீரத்தாய்மார்களாக உருவாக்குங்கள்.

1929இல் செங்கல்பட்டில் நடத்திய சுய மரியாதை இயக்க முதல் மாகாண மாநாட் டின் தீர்மானங்களில், “கணவனை இழந்த பெண்கள் மறுமணம் செய்து கொள்ள வேண்டும்”. கணவனை இழந்த பெண்கள் விதவைக் கோலத்துடன் மொட்டை அடிப்பது, வெள்ளை ஆடை உடுத்தச் சொல்வது, நகை மணிகள், அணியக்கூடாது. பூ பொட்டு வைத்துக் கொள்ளக்கூடாது. மகிழ்ச்சிக்குரிய குடும்ப விழாக்களில் கலந்து கொள்ளக்கூடாது என்பவை. இவை அனைத்தும் இந்து மதத் தின் மூலம் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.”

“பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்பட வேண்டும்” 1989இல் கலைஞர் ஆட்சியில் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டது.

போர்ப் படையில் பெண்கள் : பெண்களை அடிமைப்படுத்தும், கூர் ஆயுதம் தாங்கிய பழமைக்கு எதிரான ஒரு போரே நடத்தத் துணிந்த தந்தை பெரியார், தமது போராட்ட முன்னணிப் படையில் தாய்மார்களையே முன்னிலைப்படுத்தி னார். மது விலக்குப் போரில் நாகம்மையார், சமூகச் சீர்திருத்த எழுச்சிப் போரில் தம் தங்கை மகள்; இந்தி எதிர்ப்பு போரில் தர்மாம்பாள் அம்மையார் கைம்மை கொடுமை எதிர்ப்பு போரில் மஞ்சுளா பாய், சாதி மறுப்புக் கிளர்ச்சியில் காரைக்குடி விசாலாட்சி, நீலாவதி அம்மையார், மரகதவல்லி இப்படி எண்ணற்ற ஜெண் சிங்கங்கள் கிளர்ந்தெழுந்தனர்.

“1952-54இல் அன்றைய சட்ட அமைச்சர் டாக்டர் அம்பேத்கர் அவர்களால் கொண்டு வரப்பட்ட The Hindu Code Bill இந்து பெண்களுக்கான சொத்துரிமை திருத்தச் சட்ட மசோதாவை நாடாளுமன்றத்தின் பிற்போக்கு வைதிக சக்திகள் வரவிடாமல் தடுத்தன. அதனால் தனது பதவியை ராஜினாமா செய்துவிட்டு கம்பீரமாக அம்பேத்கர் வெளியேறினார்.”

2006இல், அதே இந்து பெண்களுக்கான சொத்துரிமைச் சட்டம் காங்கிரஸ் தலைமை யில் (U.P.A.) எனப்படும் அய்க்கிய முற்போக்குக் கூட்டணி மத்திய ஆட்சியில் (தி.மு.க. அங்கம் வகித்தது) நிறைவேற்றப்பட்டுச் சட்டமாக்கியது.

### பெரியார் பட்டம்

தமிழ்நாட்டுப் பெண்குலத் தலைவர்களான நீலாம்பிகை அம்மையார், மீனாம்பாள் சிவராஜ், பண்டித நாராயணி அம்மாள், டாக்டர் தருமாம்பாள், மலர் முத்தம்மாள், உள்ளிட் டோர் இணைந்து 13.11.1938 அன்று சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு என்ற பெயரில் நடத்தி, அதில், தோழர் ஈ.வெ. இராமசாமி என அழைக்கப்பட்டவரை “பெரியார்” என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கிப் பெருமைப்படுத்தினர். அப்போது அவர்கள் அப்பட்டத்திற்கான நியாயங்களை, உணர்வுகளை எழுத்து வடிவத்தில் வடித்துப் பாராட்டினர்.

“இந்தியாவில் இதுவரையும் தோன்றிய, சீர்திருத்தத் தலைவர்கள் செய்யாமற் போன வேலைகளை இன்று நமது தலைவர் ஈ.வெ. இராமசாமி அவர்கள் செய்து வருவதாலும், தென்னாட்டில் அவருக்கு மேலாகவும், சமமாகவும் நினைப்பதற்கு வேறொருவர் இல்லாமையாலும், அவர் பெயரைச் சொல்லிலும் எழுத்திலும் வழங்கும் போதெல்லாம் “பெரியார்” என்ற சிறப்பு பெயரையே வழங்குதல் வேண்டுமென இம் மாநாடு எல்லோரையும் கேட்டுக் கொள்கின்றது.”





தமிழ்நாட்டு மக்களின் உள்ளங்களை வென்றதால், “தந்தை பெரியார்” என்று மரியாதை யுடன், பாசத்துடன் இந்தப் பட்டம் மக்களிடம் நிலையாக நின்றது.

மனிதப்பற்றைத் தவிர வேறு எந்தப் பற்றும் எனக்கு இல்லை என்ற மானுடப் பற்றாளர் பெரியார். பெண் விடுதலைக்காகத் தன் வாழ்நாள் முழுவதும் போராடிய சமூகப் போராளி பெரியார் மறைந்து 46 ஆண்டுகள் கடந்தும் அவரை மறக்க முடிய வில்லை. மானமும் அறிவும் கொண்ட மக்களாக எனது மக்களை மாற்றுவேன் என்று சூளுரைத்தவர் பெரியார்.

தந்தை பெரியார், பெண் விடுதலைக்காகப் போராடியதால்தான், இன்று கல்வியில் மாணவர்களைவிட மாணவிகள் முதல் இடத்தில் உள்ளார்கள். “அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?” என்று கேட்ட காலம் போய், இன்று திராவிட இயக்கத்தின் தொடர்ச்சியாக தந்தை பெரியாரின் கொள்கைகளை, கோட்பாடுகளை, இலட்சியங்களை ஏற்று பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நிர்வாக ஆற்றலுடன் தமிழ் நாட்டின் முதல்வராக கழகத் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளார். இன்று கழகத் தலைவர் முதலமைச்சரின் திராவிட மாடல் ஆட்சியில் பெரியாரின் வழியில் பல எண்ணற்ற திட்டங்களை பெண்களுக்காக தீட்டி இந்தியாவிற்கே வழிகாட்டியாக உள்ளார் நம்முடைய திராவிட மாடல் நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்



**சைதை சாதிக்**
தலைமைக் கழகப் பேச்சாளர்

### தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை 2024:

சமூகத்தில் பெண்களின் வளர்ச்சியைக் கொண்டே சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியினை மதிப்பிட இயலும்; பாலின வேறுபாடுகளைக் களைந்திடவும், பெண்களுக்கான சமூகநீதி மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்திடும் வகையிலும், பெண்களுக்கு உரிய அங்கீகாரம், சமூக நீதி, பாலின சமத்துவம், ஆகியவற்றை அளித்திடும் வகையிலும், தமிழ்நாடு அரசின் சார்பில் “தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை” 2024ஐ முதல்வர் மு.க.ஸ்டாலின் 21.2.2024 அன்று வெளியிட்டு மகளிர் உரிமைக்கு வழிவகுத்துள்ளார்கள்.

### விடியல் பயணம்:

கழகத் தலைவர் முதல்வராக பொறுப்பேற்றவுடன் கோட்டைக்கு வந்து முதன் முதல் ஆணை பிறப்பித்த 5 திட்டங்களில் ஒன்று விடியல் பயணத் திட்டம். பெண்கள், மாற்றுத் திறனாளி கள், திருநங்கையர்கள் ஆகியோர்க்கான கட்டணமில்லா விடியல் பயணம் திட்டத்தில் இது வரையில் 682.02கோடி முறை பயணம் செய்துள்ளனர். திருநங்கைகள் 36.89 லட்சம் முறையும், , மாற்றுத்திறனாளிகள் 3.78 கோடி முறையும் பயணம் செய்து பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின் பயனாக மகளிர் மாதம் ஒன்றுக்கு 888 ரூபாய் வரை சேமிக்கும் வாய்ப்பைப் பெற்று மகிழ்கின்றனர்.

### கலைஞர் மகளிர் உரிமைத் தொகை:

ஏழை மக்களின் குடும்பங்களிலும், கிராமப் பொருளாதாரத்தைச் சுமக்கும் முதுகெலும்பாகப் பெண்கள் திகழ்கிறார்கள். பெண்களின் உழைப்பை முறையாக அங்கீகரிக்கும் நோக்கில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. எனவேதான், முதல்வர் இந்தத் திட்டத்திற்கு மகளிருக்கான உதவித் தொகை என்று கூறாமல் ‘மகளிர் உரிமைத் தொகை என்று பெயரிட்டுள்ளார்கள். இத்திட்டத்தில் இதுவரை 1 கோடியே 15 லட்சம் மகளிர் மாதந்தோறும் ரூ1,000 உரிமைத் தொகையாக அவரவர் வங்கிக் கணக்குகளில் பெற்று வருகிறார்கள். இந்த மகளிர் உரிமைத் தொகை இதுவரை கிடைக்காத தகுதி வாய்ந்த மகளிர் அனைவருக்கும் வழங்கிட அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

### புதுமைப் பெண் திட்டம்:

முதல்வரின். ஒரு புரட்சிகரமான திட்டம் இது. 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்புவரை அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் பயின்ற மாணவியர், தடையின்றி உயர் கல்வி பயில வேண்டும் என்ற நோக்கத்தோடு, தமிழ்நாட்டில் உள்ள மாநில அரசு, மத்திய அரசு சார்ந்த, மருத்துவக் கல்லூரி உட்பட உயர் கல்வி நிறுவனங்களில், இளநிலைப் பட்டப் படிப்பில் சேரும் மாணவியருக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கப்பட்டு வருகின்றது.

நேரடிப் பணப் பரிமாற்ற முறைப்படி, இந்த உதவித்தொகையை இதுவரை 4,95,000, மாணவியர் நேரடியாகத் தம் வங்கிக் கணக்குகளில் பெற்று முதல்வருக்கு நன்றி தெரிவித்து வருகின்றனர். இத்திட்டத்தின் காரணமாகப் பள்ளிப்படிப்பை முடித்துக் கல்லூரிகளில் சேரும் மாணவியர் எண்ணிக்கை 34 சதவீதம் அதிகரித்துள்ளது என மாநில திட்டக் குழுவின் ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது.

### மகளிர் சுய உதவிக்குழு கடன்கள் ரத்து:

கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக் கடன்களில் 31.3.2021 அன்றைய தேதியில் நிலுவையில் இருந்த கடன் தொகை ரூ.2,755.99 கோடி தள்ளுபடி செய்யப் பட்டது. 1,17,617 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 15,88,309 மகளிர் பயன்பெற்றுள்ளனர்.

### மகளிர் இடஒதுக்கீடு 40 சதவீதம்:

அரசுப் பணிகளில் மகளிர்க்கான இடஒதுக்கீடு 30 சதவீதம் என முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டில் சட்டமியற்றி நடைமுறைப் படுத்தினார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் அவர்கள் இந்த இடஒதுக்கீடு 30 சதவீதம் என்பதை 40 சதவீதமாக உயர்த்தி மகளிர் அதிக அளவில் வேலைவாய்ப்புகளைப் பெற வழி வகுத்துள்ளார்.

### கடன் உச்சவரம்பு அதிகரிப்பு:

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கிடும் கடன் உச்ச வரம்பை ரூ.12 லட்சம் என்பதில் இருந்து ரூ.20 லட்சமாக முதல்வர் மு.க.ஸ்டாலின் உயர்த்தி உத்தரவிட்டார். 2016 முதல் 2020 வரை நான்கு ஆண்டுகளில் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் ரூ. 39,468.88 கோடி. ஆனால் திராவிட மாடல் ஆட்சியில் 2021 முதல் 2025 வரை வழங்கப்பட்டுள்ள கடன் ரூ. 1,12,299 கோடி. அரசு அலுவலகங்களில் பணி புரியும் மகளிர் ஆசிரியைகளின் மகப்பேறு விடுப்பு 9 மாதம் என்பது 12 மாதங்களாக 2021ம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது.

### காவல்துறையில் பெண்கள்:

பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க 39 புதிய மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன. பெண் காவலர்கள், முக்கியப் பிரமுகர்களின் வருகையின்போது வீதிகளில் நீண்ட நேரம் நிற்கவைப்பதைத் தடுத்து, அவர்களுக்கு இலகுவான பணிகள் வழங்க ஆணையிட்டு, அவ்வாறே வழங்கப்படுகிறது தமிழ்நாடு காவல்துறையில் மகளிர் காவலர்கள் இணைந்து 50 ஆண்டுகள் நிறைவு பெற்றதையடுத்து, நடைபெற்ற பொன் விழா நிகழ்ச்சியில் சிறப்புத் தபால் உறை வெளியிடப்பட்டு, பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் ‘அவள்’ திட்டம் அறிமுக செய்யப்பட்டுள்ளது.

### அறநிலையத் துறையில் பெண் ஓதுவார்கள்:

திருக்கோவில்களில் அனைத்துச் சாதியாரும் அர்ச்சகர் திட்டத்தின்கீழ் ஓதுவார் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. ஓதுவார் பயிற்சி பெற்றவர்களில் 42 பேர் ஓதுவார்களாக நியமிக்கப்பட்ட னர். அவர்களில் 11 பேர் பெண் ஓதுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு 1996இல் வழங்கப்பட்டது . பின்னர் 50 சதவீதமாக உயர்த்தப்பட்டு, லட்சக் கணக்கான மகளிர் உள்ளாட்சி நிறுவனங்களில் பதவிப் பொறுப்புகள் பெற்றுத் தமிழ்நாட்டு முன்னேற்றத்திற்குப் பாடுபடுகின்றனர். இன்று 21 மாநகராட்சிகளின் மேயர்களில் 11 மகளிர் பெண் மேயர்களாக விளங்குவது தமிழ்நாட்டிற்குரிய தனிச் சிறப்பாகும்.

### சிப்காட் தொழில் வளாகங்களில் குழந்தைகள் காப்பகங்கள்:

முதல்வர் மு.க.ஸ்டாலின் பெண்கள் நலனில் கொண்டுள்ள அக்கறையை நமக்கு காட்டும் ஒரு மகத்தான திட்டம் குழந்தைகள் காப்பகங்கள் ஆகும். தொழிற்சாலைகளில் வேலைக்குச் செல்லும் பெண்கள் முன்னேற்றத்திற்காக, தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள 17 சிப்காட் தொழில் பூங்காக்களில் குழந்தைகள் காப்பகங்களை தொடங்கிட உத்தரவிட்டார். இந்த 17 தொழிற் பூங்காக்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள குழந்தைகள் காப்பகங்களில் ஏறத்தாழ 3 இலட்சத்து 23 ஆயிரம் தொழிலாளர்கள் பயன்பெறுகின்றார்கள். இந்தக் குழந்தைகள் காப்பகங்கள், பணிபுரியும் பெற்றோரின், குறிப்பாகப் பெண்களின் மன அழுத்தத்தைக் குறைக்கவும், பெண் தொழிலாளர்கள் அதிகளவில் பணியாற்றக்கூடிய சூழலை உருவாக்கவும் உதவுகின்றன. இப்படி, திராவிட மாடல் அரசில் புதிய புதிய திட்டங்கள் நிறைவேற்றி மகளிர் நலன்களை மேம்படுத்துவதில் தமிழ்நாடு இந்தியாவிற்கே வழிகாட்டி வருகிறது என்பதை வரலாறு போற்றுகிறது.